# <u>பத்திரிக்கை செய்தி</u>

<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.</u>

## <u>2017ம் ஆண்டிற்கான "ஜீவன் ரக்ஷா பதக்க விருது"</u>

2017 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் **"ஜீவன் ரக்ஷா பதக்க விருது"** தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பல்வேறு நிக்ழவுகளான நீரில் மூழ்கிய வரை காப்பாற்றுதல், மின்சார விபத்துகள், விபத்துகள், தீ விபத்துகள், நிலச்சரிவு, விலங்கின தாக்குதல், சுரங்க மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு மனித உயிர்களை மீட்பவர்களுக்கு கீழ்காணும் பிரிவுகளில் **ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகள்** வழங்கி வருகிறது.

**சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் –** மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை வீரத்துடன் போராடி மீட்பவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

**உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் –** துணிச்சலுடன் தாமதமின்றி செயல்பட்டு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை போராடி மீட்பவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

**ஜீவன் ரக்ஷா பதக்கம் –** தனக்கு காயம் ஏற்படினும், வீரத்துடன் தாமதமின்றி செயல்பட்டு உயிரைக் காப்பாற்றுபவர்களுக்கு இவ்விருது வழங்கப்படும்.

அதன்படி 2017 ஆம் ஆண்டிற்கான **ஜீவன் ரக்ஷா பதக்க** விருதிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்காணும் விருதிற்கான விண்ணப்பம் மற்றும் முக்கிய விவரங்களை தமிழ்நாடு விளையாட்டு ஆணைய இணையதள முகவரியான www.sdat.tn.gov.in மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2017 ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்க விருதிற்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 116–ஏ, ஈ.வே.ரா. பெரியார் நெடுஞ்சாலை, நேருபூங்கா சென்னை – 600 084 என்ற முகவரிக்கு வருகின்ற 16.08.2017 – க்குள் கிடைக்கும் விதத்தில் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு, **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்,** திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 0462–2572632 என்ற தொலைபேசி எண்ணிலோ மற்றும் 7401703452 என்ற செல்பேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் **முனைவர்.மு.கருணாகரன்,இ.ஆ.ப.,** அவர்கள் தமது செய்தி குறிப்பில் தெரிவித்தார்கள்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
திருநெல்வேலி.

8.5.17